உ

கடவுள் துணை.

இருவினைவிளக்கமென்னும்

துரோகிச்சிந்து.

இவை-சிறுமணவூர்

முனுசாமிமுதலியாரா லியற்றப்பட்டு,

:o:

ஆ-இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெம்பர் வீடு.

உ

விளம்பரம்.

—:o:—

அராபிக்கதை படத்துடன்	2	0	0
ஷை நல்லகிளேஸ்கடிதம்	2	8	0
பாகவதவசனம்...	1	8	0
ஷை திக்குகடிதம்	2	8	0
ஷை கிளேஸ்கடிதம்	2	8	0
பாரதச்சருக்கம்	2	0	0
பன்னிரண்டுநிகண்டு	1	4	0
பத்துநிகண்டு	1	0	0
பதினோராவதுநிகண்டு	0	8	0
குமாரதேவர் சாத்திரக்கோவை ...	0	10	0
ஹிந்துபாலவைத்தியபோதினி	0	10	0
திருவாதவூரர்புராணம் படத்துடன் நல்ல கிளேஸ்கடிதம் திருத்தமானபதிப்பு	0	12	0
அகஸ்தியர் வைத்தியசில்லரைக்கோர்வை...	0	14	0
அகஸ்தியர் வாதகாவியம்-௩	0	12	0
அகஸ்தியர் நாலுகாண்டஜாலம்	0	12	0
அகஸ்தியர் வாதசௌமியம்... ...	0	12	0
பூகமுனி பெருநூல் வைத்தியகாவியம் ...	0	12	0
மச்சமுனிகாவியம்-அ	0	12	0
இலக்ஷணகாவியம்-௩...	0	12	0
மனோரஞ்சிதநாடகம்	0	6	0
கொலைமறுத்தல்	0	5	0
ஆதிநாடகம்	0	4	0
கோவிலநாடகம்...	0	4	0
ஷடாக்ஷரமாரல்	0	2	0
,, விருத்தம்	0	2	0
மழைவசிங்காரசதகம்	0	2	0
சப்பிரமணியர் விஞ்சை	0	1	0
பழனியாண்டவர் பவனிவிலாசக்கும்மி...	0	1	0
விநாயகர் பூசை	0	0	6

இப்படிக்கு

ஆ. இரத்தினவேலுமுதலியார்.

சென்னை பெத்துநாய்க்கன்பேட்டை

நாராயணமுதலிவீதி 52-வது நெம்பர் வீடு.

உ

தேவிசகாயம்.

இருவினைவிளக்கமென்னும்

துரோகிச்சிந்து.

வெண்பா.

இருவினையும் பாரோ ரெளிதுணர வாராய்ந்து
சிறுமணவூர் முனிசாமிச் சாற்றுங்கால் பருவமதக்
குஞ்சரத்தோன் ஞானக் கூர்வேல் கடைக்கண்க
ளெஞ்சொல்லுக் கென்றுந் துணை.

வஞ்சநெஞ்சப்புலவரெலாம் வயற்றுக்
கஞ்சிக்கழுவாரது வாஸ்துவமே
கொஞ்சமேனுமிரக்கமுள்ள மனிதரெல்லாங்
குறைவற்றிருப்பாரது யெதாஸ்துவமே (௧)

நல்லோர்வயறெரிய செய்யுநயவஞ்சகர்
நாசமாய்ப்போவாரது வாஸ்துவமே
எல்லாங்கடவுட்செயலென்று நினைப்போரெல்லாம்
ஈடேறுவார்களது யெதாஸ்துவமே (௨)

கொடுத்தமட்டுங்கடவுள் கொடுத்தாரென்றே நினைப்போர்
குறைவற்றிருப்பாரது வாஸ்துவமே
அடுத்தசினேகிதரைக் கெடுக்கமுயல்வோரெல்லாம்
அழிந்துப்போவாரது யெதாஸ்துவமே (௩)

சொன்னசொல்தவறிப் பொய்சொல்லத்துணிவோரெல்லா
சோற்றுக்கலைவாரது வாஸ்துவமே [ம்
பண்ணியமொழிதனை யெண்ணிநடப்போர்க்கெல்லாம்
பகவானருள்கொடுப்பா ரெதாஸ்துவமே (௪)

இட்டதேபோதுமென்று கட்டுக்கஞ்சுவோரெல்லாம்
அஷ்டசுகம்பெறுவார் வாஸ்துவமே
எட்டாதபொருட்கெல்லாம் ஏணிப்போடுவோர்தனை
மட்டாவார்களது யெதாஸ்துவமே (௫)

ஆசைக்கனேகஞ்சொல்லி மோசஞ்செய்வோர்களெல்லாம்
அழிந்துப்போவார்களது வாஸ்துவமே

ஈசனுக்காகிலும் அஞ்சிப்பேசி நடப்போரெல்லாம்
வீடேறுவார்களது யெதாஸ்துவமே (௬)
நம்பிவைத்தப்பொருளை வம்புசெய்துப்பறிப்போர்
கும்போடழிந்துப்போவார் வாஸ்துவமே
அம்புவியில்பிறர்க்கு அனுகூலமேநினைத்தால்
ஆண்டவன் துணைசெய்வா ரெதாஸ்துவமே (௭)
உத்தமஸ்திரீகளின்மேல் சித்தம்வைப்போர்களெல்லாம்
ஊமையாய்ப்பிறப்பார்கள் வாஸ்துவமே
பத்தினியைத்தவிர மற்றோரைத் தாயென்றெண்ணில்
மன்னனாகப்பிறப்பா ரெதாஸ்துவமே. (௮)
கொண்டவள்மனம் நோகச்செய்யும் சம்சாரமெல்லாம்
குடியேற்றமில்லையது வாஸ்துவமே
இரண்டுபேருமொன்று யொத்திருப்பார்களாகில்
என்றுங்குறைவேயில்லை யெதாஸ்துவமே (௯)
கணவனன்றிப்பிறரை கருதாதபெண்களெல்லாம்
கைலையிடம்பெறுவார் வாஸ்துவமே
பிணமாயமதித்துப்பல புருடரைப்புணர்பவள்
பைசாசமாயலைவாள் யெதாஸ்துவமே. (௰)
தாரமிருக்கப்பரதாரத்துடன் சுகிப்போர்
நேரத்திற்கெதிராவார் வாஸ்துவமே
சோரமில்லாமலே சம்சாரத்துடனிருப்போர்
பிராரத்துவம்பெருவா ரெதாஸ்துவமே (௰௧)
திடுக்கென்றுபிறர்மனம் நடுங்கும்படிச்செய்தால்
தெய்வமழித்துவிடும் வாஸ்துவமே
கொடுக்காவிட்டாலும்வீணாய் கெடுக்காதிருந்தாலவர்
குலவிர்த்தியாயிருப்பா ரெதாஸதுவமே. (௰௨)
ஏழைவயறெரியப் பேழையில்வைத்தபணம்
பாழாகப்போகுமது வாஸ்துவமே
ஆழியைப்போல்கரை யற்றமனமுடையோர்க்
காண்டவனேகொடுப்பா ரெதாஸ்துவமே (௰௩)
சத்திரம்முதற்பல சாலைசோலையமைத்தால்
சாயுச்சியம்பெறுவார் வாஸ்துவமே
எத்திப்பிறர்பொருளைப்பற்ற உபாயஞ்செய்தால்
யமலோகம்பெறுவா ரெதாஸதுவமே (௰௪)

தன்மானம்பிரர்மானம் மெண்ணிநடப்போர்க்கெல்லாம்
தர்மமேதுணையாகும் வாஸதுவமே
பொன்னைமதித்துமானம்போக்கிப்பிழைப்போர்க்கெல்லாம்
போஜனங்கிடைப்பது அசாத்தியமே (௰௫)

எதிரில்இனிக்கப்பேசி பின்னால்புரணிசொல்வோர்
எரிநரகம்பெறுவார் வாஸதுவமே
பொதுவாகமன்னுயிர்மேல் பூரணசெஞ்சுடையோர்
புண்ணியலோகம்பெருவா ரெதாஸ்துவமே (௰௬)

கூட்டுறவைப்பிரிக்கக் கூறுண்டாக்குவோரெல்லாங்
குடியோடழிந்துப்போவார் வாஸதுவமே
நாட்டினில்பிறர்க்கெந்த நாளுந்துணைபுரிவோர்
நன்றாய்சுகித்திருப்பா ரெதாஸதுவமே (௰எ)

வாழும்பெருமையினால் ஏழையைக்கேலிசெய்வோர்
பாழாய்முடிந்திடுவார் வாஸ்துவமே
தோழனாகிலுந்தக்கத் தாழ்மையுடனிருந்தால்
சுவாமியருள்புரிவா ரெதாஸதுவமே (௰அ)

அடக்கமெனும்பதம்போல் ஒடுக்கமுடையோர்க்கெல்லாம்
ஐயன்படியளப்பார் வாஸ்துவமே
நெடுக்குக்குறுக்கறியா முடுக்குந்துடுக்குடையோர்
நீர்மேற்குமிழியாவா ரெதாஸ்துவமே (௰கூ)

சத்தியந்தவறிப்போய் சத்தியம்விரும்பினால்
சுவாமியழித்திடுவார் வாஸ்துவமே
முத்தியைவிரும்பிடும் மூதறிவோர்க்குதெய்வம்
முன்னேயிருக்குமென்பா ரெதாஸதுவமே (உ௰)

திரைசேருலகில்பிறர் சுகத்தை விரும்புவோர்க்கு
தெய்வசகாயமுண்டு வாஸ்துவமே
அரசர்சபையானாலும் அஞ்சாமற்பொய்யுரைப்போர்
அழிந்துப்போவார்களது யெதாஸ்துவமே (உக)

குறித்தக்கணக்கில்வஞ்ச நினைப்பு கொண்டழிப்பவர்
குலநாசமாகிப்போவார் வாஸதுவமே
சிரித்துப்புரமெரித்த சிவன்சாட்சியாய்நடப்போர்
சிரஞ்சீவியாயிருப்பாரெதாஸதுவமே (உஉ)

மோசஞ்செய்தாலேமகராஜனாவானென்று
மூடர்சொல்வார்களது வாஸதுவமே

ஈஜனளித்ததின்மேல் பேராசைபட்டவர்கள்
நாசமடைந்திடுவா ரெதாஸதுவமே (௨௩)

இனேகமதைபிரிக்கச் சில்மிஷஞ்செய்வோரெல்லாம்
சிரிப்பாய்சிரித்துப்போவார் வாஸதுவமே
ஆனேகயிடர்வரினும் ஆண்டதனைத்துதிப்போர்
அசைவற்றிருந்திடுவா ரெதாஸதுவமே (௨௪)

தேவாலயங்கள்பல தீர்த்தமெடுத்துவைப்போர்
தேவலோகப்பெருவார் வாஸதுவமே
பாவாணரும்பல ஏவலரைப்பழிப்போர்
ஏமலோகம்பெருவா ரெதாஸதுவமே (௨௫)

இருவினைகளும்சிறு மணவூர்முனிசாமி
யெழுதிவைத்தானது வாஸதுவமே
அருமையுணராதென் போற் கருமியெல்லாமிதனை
ஆகடியங்கள்சொல்வா ரெதாஸதுவமே (௨௬)

—:0:—

உ

கடவுள்துணை.

ஆநந்தக்களிப்பு.

மானிடமென்று வந்தோரோ—மண்மே
லெத்தனைநாளிருப்பீரோ சொல்வீரோ (மா)

காணியுனக்குண்டு வேறே—அற்ப
கனவுக்குநிகரான வாழ்வானதாலே
துணிவுகொண்டன்னியர்மேலே-தினந்
தொந்தராசெய்யாதே நரகம்பொய்யாதே (மா)

ஏழைவயறெரிக்காதே-கடவுள்
இட்டத்தின்மேலேயே ராசைகொள்ளாதே
பாழும்பணத்தை நம்பாதே-நீ
பாடையில்போகையில் கூடவாராதே (மா)

ஏழுமதில்பத்துசிரசும்-கொண்ட
ராவணன்செங்கோல் அவனுடையரசும்
தாழாமல்நின்று தாவரையும்-வீணாய்
தானென்றுத்துள்ளாதே சீக்கிரமழியும் (மா)

கல்லாஇரும்பா உடம்பு-கலி
யுகமட்டும்அழியாத வரமுண்டாசொல்லி
புல்லாகிலும்உதவியுண்டு-சுத்த
போற்றள்ளவலகைநீ நல்வழிநில்லு (மா)

சூரியனும்நூறுப்பிரவி-அவன்
துணைத்தனப்பெருமையை முடியுமாகூறி
பெரியோர்மனம் நோகச்சீறி-அவன்
பூண்டோடொழிந்தானே அரியாயாபாவி (மா)

கொடுத்திடநீயென்ன சிவமா-உனக்கு
கோபம்வந்தாலென்ன பிழைகூடஅறுமா
கெடுத்திடஉன்னாலே ஆமா-அடடா
கிஞ்சிற்றும்மலைக்காதே உன்தொழில்தவமா (மா)

இரணியனென்றப்பேர் சொன்னால்-வானோர்
சொல்லோரும்பணிவிடை செய்தாரோஅன்னாள்
கெருவத்தைமேற்பூண்டதினால்-அவன்
கிழியுண்டொருட்சண காலத்தில்மாண்டான் (மா)

தெய்வமிருக்குதென்றெண்ணு-உனக்கு
தீங்குசெய்வோர்க் குபகாரமேபண்ணு
பொய்மொழிவிஷமென்றுஎண்ணு-உனக்கு
போஜனமிட்டோரை பூசைகள்பண்ணு (மா)

ஆயிரத்தெட்டண்டமொன்றாய்-அரசு
ஆண்டசூரபத்ம னவனெங்கேநின்றான்
பாவியென்றநாமங்கொண்டோர்-கெதியை
பாடினாலுந்தோஷந் தடருமேகண்டாய் (மா)

ஆசைக்கணேகஞ்சொல்லாதே-கனவ
யானப்பிறகுநீ தோஷஞ்சொல்லாதே
மோசக்கருத்துங்கொள்ளாதே-திரு
முன்னிருக்காமல்பறந்துப்போவாளே (மா)

நீயேபிழைக்கயெண்ணாதே-பிறர்க்கு
நேற்றுச்சொன்னச்சொல்லை மறந்துப்போகாதே

நானேவீரனென்றே-நமக்கு
நடுவானகடவுளழித்திடுவாரோ (மா)

தன்னைத்தானேபுகழாதே-சற்றுத்
தாழ்ந்தவர்மீதுநீ யிழிவுசொல்லாதே
என்றால்பிழைத்தானென்றே-நம்
எல்லோர்க்கும்கடவு ளிருக்கிறார்மேலே (மா)

இழிவாகப்பிறரைச் சொல்லாதே-கையில்
இருக்கும்பொருள்நம்பி கெருவங்கொள்ளாதே
ஒழியாமலிருந்தவ ரில்லை-அடடா
உனக்குமாத்திரமென்ன கெடுவுண்டா-இல்லை (மா)

நீதோன்றியொருவரைக்கெடுத்தால்-நமக்கு
நடுவானகடவுள் அவரெங்கேயொளித்தார்
தாந்தோணிதம்பிரானால்-வீணாய்
தலைகீழாய்மாறித் தரைமட்டமாவாய் (மா)

பிரர்தொழிலைக்கெடுக்காதே-உன்
பெண்சாதிபிள்ளைபோல் அவனுக்கும்உண்டே
அரநெறியைவிடுக்காதே-நமம
ஆண்டவன்கோபத்திற் காளாய்கெடாதே (மா)

மன்னாதிமன்னரையெல்லாம்-இந்த
மண்ணுண்டுபோச்சுதே உன்னுடல்பொன்னா
தன்னாலேயாவதுயென்ன-கடவுள்
தன்செயலன்றியசையுமோ அண்ணா (மா)

படிப்பவரெல்லாமேபெரியோர்-இதின்
பயனறிந்தோரெல்லாம் மோட்சத்துக்குறியோர்
தடுப்பவரெல்லாங்கெடுவோர்-உடல்
தன்னைமலைப்போர்நரகத்துக்குடையோர், (மா)

அறிவென்னும்பொருள் தெரிந்தோரோ-எனக்கு
ஆதாரமுங்க ளிருபாதமலரோ
சிறுமணவூரறிவீர்-அடியேன்
சிறுவன்முனிசாமி பிழைபொறுப்பீரோ (மா)

முற்றிற்று.